# 8

## *திறவுகோல் வசனம்: 1 கொரிந்தியர் 11:23-25*

# இன்றைய நாட்களில் கடைப்பிடித்தல்

*கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடித்தல் என்பது வேதாகமரீதியான போதனையின் அடிப்படையில் அமைய வேண்டும். எது உள்ளடக்கப்பட வேண்டும் மற்றும் எப்போது அது கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பவற்றைப் பற்றி தேவன் வெளிப்படுத்தினார், ஆனால் எவ்வாறு அது கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது பற்றி அவர் குறிப்பிடவில்லை. என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி அறிவுறுத்துதல் தரப்பட்டிருப்பதாலும் மற்றும் கர்த்தருடைய இராப்போஜனத்தைக் கடைப்பிடிக்கும் வழி பற்றிய கட்டளையோ அல்லது உதாரணமோ இல்லாததாலும், அது மனிதரால் முடிவு செய்தல் மற்றும் முன்னுரிமை ஆகியவற்றிற்கு விடப்பட்டுள்ளது.*

## பகுதிப்பொருட்களைப் பெறுதல்

அப்பமும் திராட்ச ரசமும் விலைக்கு வாங்கப்படலாம் அல்லது வீட்டிலேயே செய்யப்படலாம். இதைப் பற்றி முடிவு செய்வதற்கு சபைக்குழுமத்தின் நடத்துனர்கள் சுயாதீனம் உள்ளவர்களாக இருக்கின்றனர். எவ்வகையிலும், அப்பம் புளிப்பில்லாததாகவும் பாத்திரத்தில் உள்ள திராட்ச ரசம், இராப்போஜனத்தை ஏற்படுத்தியபோது இயேசு பயன்படுத்தியது போன்றதாகவும் இருக்க வேண்டும்.

## இராப்போஜனத்தைக் கொடுப்பதற்கு முன்னர்

இராப்போஜனம் கொடுக்கப்படுவதற்கு முன்னர் கூறப்படவேண்டியது என்ன என்பதைப் பற்றி வேதவாக்கியங்கள் வெளிப்படுத்துவதில்லை. அப்பம் இயேசுவின் சரீரமாக இருந்தது என்று கூறியதன் மூலம் இயேசு அப்போஸ்தலர்களுக்கு இதன் அர்த்தத்தைச் சுருக்கமாக விளக்கினார் (லூக்கா 22:19; 1 கொரிந்தியர் 11:24). அப்பத்தை உண்டபின்பு அவர், பாத்திரம் பாவமன்னிப்புக்கென்று சிந்தப்படும் புதிய உடன்படிக்கைக்குரிய தமது இரத்தமாக இருந்தது என்று கூறினார் (மத்தேயு 26:28; மாற்கு 14:24; லூக்கா 22:20; 1 கொரிந்தியர் 11:25; காண்க வெளிப்படுத்தின விசேஷம் 1:5).

இராப்போஜனத்திற்கு முன்னர் ஒரு பாடல் பாடப்பட்டது என்பதற்கான குறிப்பு எதுவும் பதிவுசெய்யப்படவில்லை. பாடுதல் என்பது ஆராதனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதால் (காண்க எபேசியர் 5:19; கொலோசெயர் 3:16), இயேசுவின் மீது - அவரது வாழ்வு, அன்பு, தியாகம், உயிர்த்தெழுதல் மற்றும் மறுவருகை ஆகியவற்றின் மீது கவனம் குவிக்கப் பங்கேற்பாளர்களுக்கு உதவும்படிக்கு, நன்கு தேர்வுசெய்யப்பட்ட ஒரு பாடல் (அல்லது பாடல்கள்) ஏற்புடையவையாக இருக்க முடியும்.

நிகழ்த்தப்படும் எந்த ஒரு உரையும், ஆராதிப்பவர்கள் இயேசுவின் மீது கவனம்

குவிப்பதற்கும் ஆவிக்குரிய பலத்திற்காக அவர்கள் அவரிடம் அதிகமாய்க் கிட்டிச் சேர்வதற்கும் உதவியாக இருக்க வேண்டும். சபைக்குழுமத்தைக் கர்த்தருடைய இராப்போஜனத்திற்கு தயார்செய்வதற்காகப் பேசுகிறவர் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- வேதவாக்கியம் அல்லது வேதவாக்கியங்களைக் கவனமாகத் தேர்வு செய்து, அவற்றை இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தி அதன் ஆவிக்குரிய மறைமுகமான கருத்துக்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- சபைக்குழுமம் இயேசுவின் மீது தியானம் செய்ய உதவுதலே தமது நோக்கம் என்று உணர்ந்து அறிதல்.
- தம்மீது கவனத்தை ஈர்க்காதபடிக்கு நிச்சயித்துக் கொள்ளுதல். அவர் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவையே மகிமைப்படுத்த வேண்டும் (1 கொரிந்தியர் 2:2), ஏனெனில் அவர் இராப்போஜனத்தின் மையமாக இருக்கிறார்.

## அப்பத்தையும் பாத்திரத்தையும் பயன்படுத்துதல்

இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், மூப்பர்களே கர்த்தருடைய பந்தியை நடத்துபவர்களாக இருந்தனர். கி.பி. 110ம் ஆண்டு வாக்கில் இக்னேஷியஸ் அவர்கள் பின்வருமாறு போதித்தார்:

> மூப்பர் தவிர வேறு எவரும் சபைக்கு உரிய செயல்கள் எதையும் செய்யாதிருப்பார்களாக. மூப்பர் அல்லது அவர் நியமிக்கும் ஒருவரின் கீழ் மதிப்பு மிக்கதாக இராப்போஜனம் செய்யப்படுவதாக.[1]

கி.பி. 200ம் ஆண்டு வாக்கில் தொடக்ககால சபை பற்றிய மிகப்பெரிய நூல் தொகுப்பு மற்றும் பலவகைப்பட்ட விஷயங்கள் பற்றிய பாடங்களை எழுதிய ரோமானியரான ஹிப்போலிட்டஸ் அவர்கள், மாதிரி ஜெபம் ஒன்றை எழுதி, பின்வருமாறு கூறினார்:

> மற்றும் மூப்பர் முன்பு கூறியபிரகாரம் நன்றி செலுத்துவார். ஒரு சுருக்கமான வடிவத்தின்படியான ஒரு ஜெபத்தை மனப்பாடமாகக் கூறுவது முற்றிலும் அவசியமே அல்ல, எவரொருவரும் அவரைத் தடை செய்ய வேண்டாம்.[2]

மூப்பர்கள் மாத்திரமே கர்த்தருடைய இராப்போஜனத்தை நடத்துவதில் தவறு எதுவும் இல்லை, ஆனால் இப்படிப்பட்ட நடைமுறைப்பழக்கம், கட்டுப்படுத்துவதாக இருப்பதில்லை. சபைக்குழுமத்தில் எந்த மனிதர்கள் கர்த்தருடைய பந்தி மேஜையில் பரிமாற வேண்டும் என்பது பற்றிப் புதிய ஏற்பாடு கூற்று அல்லது உதாரணம் எதையும் தருவதில்லை என்பதால், விசுவாசம் நிறைந்த எந்த ஒரு கிறிஸ்தவரும் ஏற்புடைய வகையில் இதைப் பரிமாற முடியும். சபைக்குழுமத்தில் பேசவோ (1 கொரிந்தியர் 14:34, 35) அல்லது ஆராதனையில் வழிநடத்தும் பணிப்பொறுப்பைக் கொண்டிருக்கவோ (1 தீமோத்தேயு 2:11, 12) பெண்களுக்கு உரிமை இல்லை என்பதால், அவர்கள் இதில் இருந்து விலக்கப்பட்டுள்ளனர். பெண்கள் அல்ல ஆனால் ஆண்களே பொது கூடுகைகளில் ஊழியம் செய்ய வேண்டும் என்று தொடக்ககால சபை வரலாறு சான்றுடன்

வலியுறுத்துகிறது.

அப்பமும் திராட்சரசமும் எவ்வாறு மக்களுக்குப் பரிமாறப்பட வேண்டும் என்பதைப் புதிய ஏற்பாடு வெளிப்படுத்துவது இல்லை. இதை சபைக்குழுமங்கள் பின்வரும் உதாரணங்கள் உட்படப் பல வழிகளில் செய்கின்றன:

- இராப்போஜனத்தைப் பெற்றுக்கொள்வதற்காக உறுப்பினர்கள் பந்தி மேஜையினிடம் அணி அணியாகச் செல்லலாம்.
- நினைவுச் சின்னங்களைப் பரிமாறுபவர்கள் சபைக்குழுமத்தின் முன் பகுதியில் இருந்து பின்பகுதி வரையில் (அல்லது பின்னிருந்து முன்வரையில்) எடுத்துச் செல்லலாம்.
- பரிமாறுபவர்கள் சபைக்குழுமத்தின் முன்பகுதியில் இருந்து பின்பகுதி வரையில் அப்பத்தைப் பரிமாறி, ஜெபத்திற்குப் பின்னர் பின்பகுதியில் உள்ள உறுப்பினர்களில் இருந்து முன்பகுதியில் உள்ள உறுப்பினர்கள் வரையில் பாத்திரத்தைப் பரிமாறலாம்.
- சில சபைக்குழுமங்கள் (அப்பத்தைப் பெற்றபின்பு) காத்திருந்து ஒன்றாக உண்டு பின்பு பாத்திரம் பரிமாறப்பட்ட பின்பு அதிலும் ஒன்றாகப் பருகுகின்றன.

## பரிமாறுதலின் வரிசைமுறை

இயேசு அப்பத்தை எடுத்து அதை அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தார் பின்பு அவர்கள் பாத்திரத்தில் இருந்து பானம்பண்ணினர். இயேசுவின் உதாரணம் இன்றைய நாட்களில் கடைப்பிடிக்கப் படவேண்டிய ஒரு குறிப்பிட்ட வரிசைமுறையை உள்ளடக்கிற்று. (மத்தேயு 26:26, 27; மாற்கு 14:22, 23; லூக்கா 22:17-20; 1 கொரிந்தியர் 11:23-25 ஆகிய வசனங்களை வாசிக்கவும்.)

அப்பத்தைக் குறித்து அவர் பின்வருவனவற்றைச் செய்தார்:

- அதை எடுத்தார்.
- அதை ஆசீர்வதித்தார் அல்லது அதற்காக நன்றி செலுத்தினார்.
- அதை பிட்டார்.
- அதை அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தார்.
- தமது நினைவாக அதைப் புசிக்கும்படி அவர்களுக்குக் கூறினார்.

பின்பு அவர் பாத்திரத்தைக் குறித்துப் பின்வருவனவற்றைச் செய்தார்:

- அதற்காக நன்றி செலுத்தினார், அதை முன்னதாக எடுத்து அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்திருந்தார்.
- தமது நினைவாக அதில் பானம்பண்ணும்படி அவர்களுக்குக் கூறினார்.

இயேசு அப்பத்தைப் பரிமாறுவதற்கு முன்னர் அதை உடனடியாகப் பிட்டார் என்ற கூற்று, இராப்போஜனத்தை "அப்பம் பிட்குதலிலும்" (நடபடிகள் 2:42) அல்லது "அப்பம்பிட்கும்படி" (நடபடிகள் 20:7; காண்க 1 கொரிந்தியர் 10:16) என்று குறிப்பிடுவதற்குக் காரணமாகக் கருதப்படக் கூடாது. இந்தச் சொற்றொடர் மிகப்பெரும்பாலும், உணவை உண்பதற்கு பொதுவாகப் பயன்படுத்தப்படும் சொல்விளக்கமாக இருந்த காரணத்தினால் - இவ்விடத்தில்

*இது கர்த்தருடைய உணவு என்ற வகையில் - இது பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.*

## இராப்போஜனத்திற்காக ஜெபம்

*கர்த்தருடைய இராப்போஜனத்தின்போது, இயேசுவின் ஜெபங்களைக் குறிப்பதற்கு, இரண்டு கிரேக்க வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன:* (*eulogeo*) *''ஆசீர்வதித்து'' (இதிலிருந்தே* ''eulogy'' *என்ற வார்த்தை தரவழைக்கப்பட்டுள்ளது) மற்றும்* (*eucharisteo*) *''ஸ்தோத்திரம்பண்ணி'' (இதிலிருந்தே* ''Eucharist'' *என்ற வார்த்தை வந்துள்ளது).*

*மத்தேயு மற்றும் மாற்கு ஆகியோரின் சுவிசேஷப் புத்தகங்களின்படி, இயேசு அப்பத்தை "ஆசீர்வதித்தார்"* (*eulogeo*)*: "இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து" (மத்தேயு 26:26); "இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு" (மாற்கு 14:22).*

*லூக்கா மற்றும் பவுல் ஆகியோர், இயேசு அப்பத்திற்காக "ஸ்தோத்திரம்பண்ணினார்"* (*eucharisteo*) *என்று எழுதினர்: "அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி அதைப் பிட்டு" (லூக்கா 22:19); "கர்த்தராகிய இயேசு ... அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு ..." (1 கொரிந்தியர் 11:23ஆ, 24அ).*

*இயேசு பாத்திரத்திற்காக ஜெபித்தபோது, அவர் "ஸ்தோத்திரம்பண்ணினார்"* (*eucharisteo*) *(மத்தேயு 26:27; மாற்கு 14:23). இயேசு பாத்திரத்தை ஆசிர்வதித்தார் என்றோ அல்லது அதைக் கொடுப்பதற்கு முன்னர் அதற்காக அவர் ஜெபித்தார் என்றோ பவுல் குறிப்பிடவில்லை (1 கொரிந்தியர் 11:25).*

*"ஆசிர்வதித்தல்'' மற்றும் "நன்றி செலுத்துதல்'' என்ற சொற்றொடர்கள் சிலவேளைகளில் ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. "ஆசீர்வதித்தல்"* (*eulogeo*) *என்பது "நன்றி செலுத்துதல்" என்றோ அல்லது "விசேஷ தயவு பொழியப்பட்டதற்காக பாராட்டுதலை வெளிக்காண்பித்தல்'' என்றோ அர்த்தப்படுவதே இதற்குக் காரணமாக உள்ளது. நான்காயிரம் பேருக்கு உணவு அளித்த நிகழ்வில் இயேசு அப்பங்களைப் பிட்பதற்கு முன்னர் ஜெபம் செய்தது குறித்து, மத்தேயு "ஸ்தோத்திரம் பண்ணி"* (*eucharisteo*) *என்ற சொற்றொடரைப் பயன்படுத்தினார் (மத்தேயு 15:36-38), இதே நிகழ்வைக் குறிப்பிடுவதில் மாற்கு ''ஆசீர்வதித்து''* (*eulogeo*) *என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் (மாற்கு 8:7-9).*

*அப்பம் மற்றும் பாத்திரம் ஆகியவற்றில் பங்கேற்பதற்கு முன்னர் கூறப்படும் ஜெபங்கள், சிலுவையில் இயேசுவின் தியாகத்தினால் கிடைத்த ஆசீர்வாதங்களுக்காகத் தேவனுக்கு நன்றியுணர்வை வெளிப்படுத்த வேண்டும். அவைகள் தனிப்பட்ட ஜெபங்களாக இருக்கக் கூடாது, ஆனால் ஒருவர் அமைதியாக மற்றும் அர்த்தத்துடன் ஜெபிக்க, சபைக்குழுமத்தின் மற்றவர்கள் அமைதியாக அதைக் கவனிக்க வேண்டும். இப்படிப்பட்ட ஜெபத்தில் வழிநடத்துதலின் இலக்கு நீண்டதாக இருக்கக் கூடாது, ஆனால் அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும். எளிமை மற்றும் உண்மை உணர்வு என்பது எல்லா பொது ஜெபங்களின் பண்பாக இருக்க வேண்டும்.*

*சிலர், அப்பமும் திராட்ச இரசமும் சபைக்குழுமத்திற்குத் தரப்படுவதற்கு*

முன்னர் அவற்றிற்காக ஒரே வேளையில் நன்றி செலுத்தும் ஜெபத்தை ஏறெடுக்கின்றனர். இயேசு அப்பத்திற்காக ஒன்றும் பாத்திரத்திற்காக ஒன்றுமாக இரு ஜெபங்களில் வழிநடத்தியதற்கு ஒரு நல்ல காரணத்தைக் கொண்டிருந்து இருக்க வேண்டும். அவரது உதாரணத்தைப் பின்பற்றி ஒவ்வொன்றும் பரிமாறப்படுவதற்கு முன்னர் ஒரு ஜெபம் செய்தல் என்பது மிகவும் ஏற்புடைய விஷயமாக இருக்கும்.

## யாருக்காக?

*அப்பமும் திராட்ச இரசமும் பிள்ளைகளுக்கும், கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கும், மற்றும் சபையைப் பார்க்க வந்தவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமா? சில நாமகரணக் குழுக்கள், கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பார்வையாளர்கள் பெற்றுக்கொள்ள அனுமதிக்கும் முன்னர், ஒரு பரிந்துரைக் கடிதத்தைக் கேட்கின்றன. இருப்பினும் இது அனாவசியமானதாகும். மற்றவர்கள் சபையின் பெயர்ப்பட்டியலில் உள்ள உறுப்பினர்களுக்கு மாத்திரம் ஐக்கிய விருந்தை அளிக்கின்றன. மீண்டும், இது புதிய ஏற்பாட்டில் காணப்பட்ட நடைமுறையாக இருப்பதில்லை.*

*தகவல் தெரிவிக்கப்படாத பார்வையாளர்கள் இருக்கலாம் என்பதால், கர்த்தருடைய இராப்போஜனத்தின் நோக்கம் மற்றும் அதில் யார் பங்கேற்க வேண்டும் என்பவற்றைப் பற்றி யாரேனும் ஒருவர் விளக்கம்தர வேண்டும். சபை (கொலோசெயர் 1:18) என்ற கிறிஸ்துவின் ஒரே சரீரத்தில் (1 கொரிந்தியர் 10:16, 17; 12:13) இருப்பவர்கள் இராப்போஜனத்தைப் புசிக்க உரிமை கொண்டுள்ளனர். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற (ரோமர் 6:3; கலாத்தியர் 3:27) கிறிஸ்தவர்களே இந்த சரீரத்தில் அமைவு கொண்டுள்ளனர் (ரோமர் 12:5).*

*ஞானஸ்நானம் பெற்றிராத பிள்ளைகள் (இதை உண்ணுவதில் இருந்து) புறக்கணிக்கப்பட வேண்டும். வந்துள்ள கிறிஸ்தவர்கள் தங்களைத் தாங்களே சோதித்தறிந்து பாத்திரமான வகையில் இதில் பங்கேற்க வேண்டும் (1 கொரிந்தியர் 11:27, 28). ஐக்கியத்தை விட்டு விலக்கப்பட்டிருக்கிற தனிநபர் (1 கொரிந்தியர் 5:11) தவிர, ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் (இரு) நினைவுச்சின்னங்களும் (அப்பமும் திராட்ச ரசமும்) வழங்கப்பட வேண்டும்.*

## இராப்போஜனத்தின் வேளை

*கர்த்தருடைய இராப்போஜனம் உண்ணப்பட வேண்டிய வாரத்தின் நாளைப் பற்றிய தகவலை வேதவசனங்கள் தருகின்றன, ஆனால் எந்த வேளையில் என்பதைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. துரோவாவில் இருந்த சபையார், வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக்கிழமையில் கூடிவந்தனர் (நடபடிகள் 20:6, 7). எந்த மணிவேளை என்பது பெரிதளவில் முக்கியத்துவம் அற்றது என்பதால், வாரத்தின் முதல்நாளில், சபைக்குழுமத்தில் இருப்பவர்களுக்கு மிகவும் வசதியான எந்த நேரத்திலாவது அவர்கள் கூடிவரலாம். கிறிஸ்தவத்தின் தொடக்க நூற்றாண்டுகளில் சில கிறிஸ்தவர்கள் வேலைக்குச் செல்லுமுன் அதிகாலையில் கூடினர்.*

*சபைகூடுகையின்போது - தொடக்கத்தில், இடையில் அல்லது ஆராதனை முடிவு வேளையில் என்று - எந்த வேளையிலும் ஐக்கிய விருந்து*

கடைப்பிடிக்கப்படலாம். அவ்வப்போது, முழு ஆராதனையுமே கர்த்தருடைய இராப்போஜனத்தைச் சுற்றி அமைவதாகத் திட்டமிடுதல் உதவி நிறைந்ததாக இருக்கலாம். பாடல்கள், வேதவசனங்கள் மற்றும் பிரசங்கம் ஆகியவை தேவனுடைய பலி ஆட்டுக்குட்டியான இயேசுவின் பந்தியைச் சுற்றிலும் நாம் கூடிவருகையில் அவர் மீது கவனம் குவிப்பதாக இருக்க முடியும்.

ஒரு சில உறுப்பினர்கள் ஞாயிற்றுக்கிழமை காலைவேளையில் கூடிவர முடியாதிருந்தால், ஒரு சபைக்குழுமம் அந்த உறுப்பினர்களுக்காக மாத்திரம் அந்த நாளின் பிற்பகுதியில் கர்த்தருடைய பந்தியை வழங்க ஏற்பாடுகள் செய்கிறது.

சில கிறிஸ்தவர்கள், வியாதியாயிருத்தல், காயப்பட்டிருத்தல், உடல் ஊனமாயிருத்தல் அல்லது மருத்துவமனையில் இருத்தல் போன்ற நியாயமான காரணங்களினால் சபைக்கு வரக்கூடாது இருக்கலாம். இவ்வாறு வர இயலாதவர்களுக்கு, அவர்கள் ஆண்டவருடன் ஐக்கியவிருந்துண்பதற்கும் ஆவிக்குரிய பலத்தைப் பெறுவதற்கும் ஒரு வாய்ப்பைத் தருதல் என்பது நிச்சயமாகவே உதவிநிறைந்ததாக இருக்கிறது. உறுப்பினர்களில் ஒரு குழுவினர் (இரு) நினைவுச் சின்னங்களையும் தங்களுடன் எடுத்துச் சென்று, பாடல்கள், ஜெபங்கள், வேதவசனங்கள் மற்றும் சுருக்கமான ஒரு பாடம் ஆகியவற்றுடன் சாத்தியமான வகையில் அவர்களை ஊக்கப்படுத்துதல் நல்லதாக உள்ளது. தேவனுடைய மக்களின் ஆவிக்குரிய வாழ்விற்கு இவை யாவும் முக்கியமானவையாக உள்ளன.

கர்த்தருடைய பந்தியில் பங்கேற்பதற்கு மாத்திரம் சபைக்குழுத்திற்கு வர முடிவு செய்பவர்கள், ஆராதனையின் பிற அம்சங்களின் முக்கியத்துவத்தையும் கிறிஸ்தவ ஐக்கியத்தின் முக்கியத்துவத்தையும் காணாது விடுகின்றனர். அவசரநிலைகள் இதை மன்னிக்கக் கூடியதாக்கலாம்.

## தொகுப்புரை

கர்த்தருடைய இராப்போஜனம் என்பது கர்த்தருடைய நாளில் கிறிஸ்தவ கூடுகையில் உள்ளார்ந்த மற்றும் குறிப்பிடத்தக்க பாகமாக உள்ளது. இதை வழங்குபவர்களும் இதில் பங்கேற்பவர்களும், இயேசுவின் சரீரத்தையும் இரத்தத்தையும் குறிக்கிற அப்பத்தை உண்டு பாத்திரத்தில் பானம் செய்தலின் ஈர்ப்பை உணர்ந்தறிய வேண்டும். கர்த்தருடைய பந்தியைக் கடைப்பிடிக்கும் யாவரும், அப்பத்தை உண்டு பாத்திரத்தில் பானம் பண்ணுதலில் இயேசு எவ்வாறு நினைவுகூரப்படுகிறார் என்பதை அவரே கவனித்து ஆழ்ந்து சிந்திக்கிறார் என்பதை உணர்ந்தறிதல் நன்மையைச் செய்யும்.

---

குறிப்புகள்

[1]Ignatius *Smyrnaeans* 8:4, 5. [2]Hippolytus *Apostolic Traditions* 4.10.

*அப்பொழுது, அந்தப் பரிசேயரும் வேதபாரகரும் அவரை நோக்கி: உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை மீறி, "ஏன் கை கழுவாமல் சாப்பிடுகிறார்கள் என்று கேட்டார்கள்?" அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக:*

*'இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்;*
*அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்றும்,*
*மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து,*
*வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதியிருக்கிறபிரகாரம்.'*

*மாயக்காரராகிய உங்களைக் குறித்து, ஏசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான். நீங்கள் தேவனுடைய கட்டளையைத் தள்ளிவிட்டு, மனுஷருடைய பாரம்பரியத்தைக் கைக்கொண்டுவருகிறவர்களாய், கிண்ணங்களையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள்; மற்றும் இப்படிப்பட்ட அநேக சடங்குகளையும் அனுசரித்துவருகிறீர்கள் என்றார். பின்னும் அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தைக் கைக்கொள்ளும்படிக்குத் தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது (மாற்கு 7:5-9) என்றார்.*

நூற்றாண்டுகளினூடே, கர்த்தருடைய இராப்போஜனப் பாரம்பரியத்தினால் சுற்றிச் சூழப்பட்டதாகி உள்ளது. பாரம்பரியங்களில் பல்வேறுபட்ட வகைகள் உள்ளன. அவற்றில் சில தவறானவையாக இருக்கையில் சில சரியானவைகளாக உள்ளன. "பாரம்பரியம்" (*paradosis*) என்ற வார்த்தை, கையளிக்கப்பட்ட விஷயத்தைக் குறிக்கிறது.

மூன்று வகையான பாரம்பரியங்கள் உள்ளன:

(1) ஏவுதல் பெற்ற மனிதர்கள் மூலமாகக் கையளிக்கப்பட்ட *தேவனுடைய பாரம்பரியங்கள்.* இந்த போதனைகள் தேவனிடத்தில் இருந்து வந்துள்ளவைகள், ஆதலால் இவைகள் கவனமாகப் பின்பற்றப் படவேண்டும்.

*சகோதரரே, நீங்கள் எல்லாவற்றிலும் என்னை நினைத்துக்கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன் (1 கொரிந்தியர் 11:2).*

*ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள் (2 தெசலோனிக்கேயர் 2:15; காண்க 3:6).*

(2)தேவனுடைய கட்டளையைப் புறம்பே தள்ளி வைக்கிறதான *தேவனுடைய தெரிந்து கொள்ளுதல்கள் மற்றும் நடைமுறைகளுக்கு நேரெதிராக உள்ள மனித பாரம்பரியங்கள்* (மாற்கு 7:13). கர்த்தருடைய பந்தியில் திராட்ச இரசத்திற்கு (மத்தேயு 26:28, 29) பதிலாகத் தண்ணீரைப்

பயன்படுத்துதல் மற்றும் ஞானஸ்நானத்தில் முழுக்காட்டுதலுக்கு (ரோமர் 6:4; கொலோசெயர் 2:12). பதிலாகத் தண்ணீர் தெளித்தல் ஆகியவை இதற்குச் சில உதாரணங்களாக உள்ளன. இந்த நடைமுறைகள் மனிதரின் கண்டுபிடிப்புகளாக உள்ளன. இவ்விதமான இயல்புடைய பாரம்பரியங்கள் மக்களை தேவனுடைய சத்தியத்தைப் பின்பற்றுவதிலிருந்து தடைசெய்கின்றன (தீத்து 1:14). இப்படிப்பட்டவை தேவனுக்கு ஏற்பில்லாதவைகளாக உள்ளன (மத்தேயு 15:2-6; மாற்கு 7:3, 7-13; கலாத்தியர் 1:14; கொலோசெயர் 2:8).

*(3) தேவனுடைய கட்டளைகளைப் புறம்பே தள்ளாதவைகளாக உள்ள மனித பாரம்பரியங்களில்* குடும்ப பாரம்பரியங்கள், தேசீய பாரம்பரியங்கள், மதரீதியற்ற விடுமுறை நடைமுறைகள் அல்லது புதிய ஏற்பாட்டு போதனைகளைக் செயல்படுத்தும் பாரம்பரியமான வழிமுறைகள் ஆகியவை உள்ளடங்கலாம். சபை கூடிவரும் நாளின் நேரம், ஆராதனை நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் இல்லத்தில் நாம் உண்ணும் உணவு ஆகியவை இதற்கு உதாரணங்களாக உள்ளன (ரோமர் 14:2, 3; கொலோசெயர் 2:16; 1 தீமோத்தேயு 4:1-4). புதிய ஏற்பாட்டின் போதனைகளுடன் எதையும் கூட்டாத, அதில் இருந்து எதையும் எடுத்துப் போட்டுவிடாத அல்லது மாற்றாத இப்படிப்பட்ட பல பாரம்பரியங்களை நாம் நடைமுறைப் படுத்துகிறோம்; ஆனால் இவற்றை நாம் மற்றவர்கள் மீது திணிப்பதில்லை.